சென்னை, தியாகராயர் நகரில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் 98வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் கவியரசு கண்ணதாசன் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சிவகங்கை போக்குவரத்து சப் - இன்ஸ்பெக்டரிடம்

தகராறுசெய்த சிவகங்கை நகர பா.ஜ.க. தலைவர் கைது!

சிவகங்கை . ஜூன் 25–

சிவகங்கை நகர் போக்குவரத்து சப்–இன்ஸ்பெக்டராக திருமதி அழகுராணி.பணிபுரிந்துவருகிறார். இவர் நேற்று முன்தினம் மாலை கோட்டை முனியாண்டி கோயில் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது சிவ கங்கை நகர பா.ஜ.க தலைவர் எம். ஆர்.உதயா வந்தபோது அவரது காரை நிறுத்துமாறு கூறி உள்ளார். காரிலிருந்து இறங்கிய பா.ஜ.கநகர தலைவர் உதயா போக்குவரத்து சப்–இன்ஸ்பெக்ட ரிடம் தகராறு செய்து அவதூறான முறையில் தவறான வார்த்தைகளால் பேசிஅ வரது பணியை செய்யவிடாமல் தடுத்துள்ளார். இது குறித்து அழகு ராணி சிவகங்கை நகர் போலீசில் புகார் செய்தார். இத்தொடர்பாக சிவகங்கை டி.எஸ்.பி. சி பி சாய் சௌந்தர்யன் உத்திரவின் பேரில் நகர் இன்ஸ்பெக்டர் லிங்கபாண்டி யன் போக்குவரத்து சப்–இன்ஸ் பெக்டரை பணிசெய்ய விடாமல் தடுத்ததாக உதயா மீது வழக்கு பதிவு செய்தார். இது தொடர்பாக பா.ஜ.க தலைவர் உதயா போலீசா ரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட உதயா நீதிபதிமுன் ஆஜர் படுத்தப்பட்டார். உடல்நல குறைவினால் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க் கப்பட்டுள்ளார் .அங்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தண்டராம்பட்டு, அரூர்,

ஊத்தங்கரை தொகுதிகளை உள்ளடக்கி - நூற்பாலை அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் செங்கம் மு.பெ.கிரி வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 25-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய செங் கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி, "தண்டராம்பட்டு, அரூர், ஊத்தங்கரை தொகுதி களை உள்ளடக்கி, நூற்பாலை ஒன்று அமைத்திடுவீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

மு.பெ.கிரி: கைத்தறி மற் றும் துணிநூல் துறை துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கா ணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

செங்கம் தொகுதி, தண் டாரம்பட்டு பகுதியில் பருத்தி நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் ஆர். காந்தி: தமிழ கத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பா லைகளில் 12 கூட்டுறவு நூற் பாலைகள் பல்வேறு கார ணங்களால் முற்றிலுமாக செயலிழந்தன. தற்போது இயங்கும் 6 கூட்டுறவு நூற் பாலைகள் அரசின் முக்கி யத் திட்டங்களான வேட்டி, சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் துணிகள் விநியோகம் செய் யத் தேவை யான நூலை வழங்கி வருகின்றன. இந்த நிலையில், செங்கம், தண் டாரம்பட்டு பகுதியில் பருத்தி நூல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீல னையில் இல்லை.

மு.பெ.கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, தண் டாரம்பட்டு என்பது கல்வ ராயன்மலை அடிவாரத்தில் இருக்கிற ஓர் ஒன்றியம். பக் கத்திலே தருமபுரி மாவட் டம், கிருஷ்ணகிரி மாவட் டம் இணைக்கின்ற பகுதி. அங்கெல்லாம் வானம் பார்த்த பூமி. பருத்திதான் அதிகமாக நடுகின்றோம். எனவே, எத்தனை நூற்பா லைகள் நிறுத்தப்பட்டிருந் தாலும், புதிதாக ஒரு நூற் பாலையை நவீன வசதிக ளோடு தண்டராம்பட்டு, அரூர், ஊத்தங்கரை தொகு தியை உள்ளடக்கி ஒரு இடத்திலே அரசு அமைக் குமா என்பதை பேரவைத்

தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் ஆர். காந்தி: பேர வைத் தலைவர் அவர்களே, இந்த 12 நூற்பாலைகள் பல் வேறு காரணத்தினாலே முற்றிலுமாக செயிலில் இல்லை. சட்டப்பூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர் மட்ட ஆலோசனைக் குழு வின் பேரில் செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங் கள் சட்டம் 1983 பிரிவு 137(2b) கீழே கலைக்கப் பட்டன.

அதுமட்டுமல்லாது, மத் திய அரசுமூலம் செயல் பட்ட NTC Mills கிட்டத் தட்ட 7 mills மூடப்பட்டுள் ளன. அதனால், எந்தக் கார ணத்தைக் கொண்டும் இந்த நூற்பாலையை புதியதாக திறக்கவே முடியாது.

மு.பெ.கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, செங் கம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட செங்கம் நகரத் தையொட்டி ஏற்கெனவே 5 ஏக்கர் நிலம் பட்டுப் பூச்சி வளர்ப்பு வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு அந்த இடம் இப்போது பயன்பாடற்றுக் கிடக்கிறது. அதில், இந்தத் துறையின் சார்பில், ஏதா வது ஒரு பயிற்சி மையமா வது அமைத்து அந்த நிலத்தை பயன்படுத்து வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என் பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் ஆர்.காந்தி: பேர வைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு ஏதாவது வாய்ப்பிருந்தால் செயல்ப டுத்த முடியும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

அந்தியூர் தொகுதியில் - மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறந்திடுவீர்!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 25 –

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய அந்தியூர் தொகுதி கழக உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், "அந்தியூர் தொகுதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறந்திடுவீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :

ஏ.ஜி.வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியிலே 32 கிராமங்கள் இருக்கின்றன. அதில் பல்வேறு கிராமங்களுக்கு பேருந்து செல்லுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்தப் பகுதி மக்கள், அந்தியூரையே பார்க்காத அந்தப் பழங்குடியின மக்கள், ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோர் பெருமளவில் இருக்கின்றனர். ஆதலால், மக்களுடைய வாழ்வாதா ரத்தைக் கவனத்தில்கொண்டு, சிரத்தனமாகக் கருதி, பர்கூர் மலைப் பகுதியைப் பொறுத்தவரையில் மூன்று பகுதிகளாகப் பிரிந்து பரந்த வெளியில்

மக்கள் இருக்கின்றார்கள். அந்த மக்களை பர்கூரில் இருக்கின்றன main roadற்கு, சிற்றுந்துகளை இயக்கி பர்கூர் main roadற்கு கொண்டு வந்து விட்டுவிட்டாலே போதும். மற்ற நான்கு பேருந்துகள் பர்கூரிலிருந்து அந்தி யூருக்கு வந்து சென்று கொண்டிருக்கிறது. அந்த மக்கள் மிவும் சவுகரியமாக வந்து சென்றுவிடுவார்கள். ஆதலால், அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து அந்த மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை காத்திட இரண்டு சிற்றுந்துகளை இயக்கித் தந்திட வேண்டுமென பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதியே இல்லாத மக்களுக்கு பேருந்து வசதியை தர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில்தான் தருமபுரி மாவட்டத்தில் வத்தல்மலை என்ற பகுதியில் நம்முடைய மாண்புமிகு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் சென்றபோது அந்தப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி இல்லை என்ற குறையைப் போக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களி டத்திலே மனு அளித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அதை கனிவோடு பரிசீலித்து அந்தச் சாலையை விரிவாக்கம் செய்து பேருந்து விடுவதற்கு ஆணையிட்டார்கள். கடந்த ஆண்டு வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை அங்கே இயக்கி வைத்தார்கள். எனவே, பேருந்தை இயக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்கள் நமக்கு வழங்கியிருக்கின்ற அறிவுரை. அவருடைய அந்தியூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, அதிலே இருக்கின்ற அந்த மலைக் கிராமங்களில், பல்வேறு கிராமங்களுக்கு ஏற்கெனவே பேருந்து வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் ஒரு சில கிராமங்களுக்கு அந்த பேருந்து வசதிகள் இல்லை. அதிலே குறிப்பாக மலைப் பகுதியில் அமைந்துள்ள சுண்டபூர், சோழகனை போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சாலையானது குறுகிய கரடுமுரடான மண் சாலையாக உள்ளது. இன்னொன்று வனத் துறையிலே அந்த வனச் சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிலே அனுமதி பெற்றுத்தான் அமைக்கவேண்டிய சூழல். எனவே, அதில் இருக்கின்ற இடர்பாடுகளை நீக்கி அந்தப் புதிய சாலைகளை அமைக் கும்பட்சத்தில் அங்கே பேருந்து இயக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ.ஜி.வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி. அந்தியூர் தொகுதி மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து, அந்தியூர் தொகுதியிலே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை. அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி நகருக்குத்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அது அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் என்றாலும்கூட மலைப் பகுதியிலிருந்து 70 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் போன்ற தொலைத்தூரத்திற்கு வந்துதான் அந்த வாகனங்களை பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை அந்த மக்களுக்கு. அவர்கள் கஷ்டத்தில் இருந்து வருகிறார்கள். அதனால் அந்தியூரில், அந்தியூர் வட்டத்தில், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும், மலைப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அவசியம். அங்கே இருக்கின்ற வாகன செறிவினை கணக்கில் எடுத்துக் கொண்டு, அரசினுடைய நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக ஆதிதிரா விடர் அணி சார்பில் 2 நாள் கபடி போட்டி நூம்பல் பள்ளி விளையாட்டுத்திடலில் மாவட்ட ஆதி திராவிடர் அணி துணை அமைப்பாளர் என்.ஜி.ஆசைத்தம்பி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநில ஆதி திராவிடர் அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கி னார். உடன் திருவேற்காடு நகர செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிட நலகுழு தலைவர் வி.தணிகாசலம், மாவட்ட ஆதிதிராவிட அணி அமைப்பாளர் விமல் ஆனந்த், நிர்வாகிகள் சத்தியசீலன், என். சி.அரசு, என்.பி.ஜெகன், இ.அன்பு, பி.பாலு, கணேஷ்குமார், என்.சி.சங்கர், என்.சி.ஜெயக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

'மா' மகசூலுக்கு இன்சூரன்ஸ் காப்பீடு வேண்டும்!

மாதவரத்தில் 'ஹைடெக் சிட்டி' உருவாக்கிடுவீர்!

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ்.சுதர்சனம் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 25-

சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங் கேற்றுப் பேசிய மாதவரம் தொகுதி கழக உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம், "மாதவரத்தில் ஹைடெக் சிட்டி' உருவாக்கிடுவீர்!" என வேண்டுகோள் விடுத் தார்.

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ். சுதர் சனம் பேசியதாவது :-

இன்றைய தினம் நீர்வ ளத் துறை, இயற்கை வளங் கள் துறை மற்றும் தொழி லாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகள்மீது நடைபெறும் மானியக் கோரிக்கை விவா தத்தில் உரையாற்றிட எனக்கு வாய்ப்பளித்த, நடந்து முடிந்த பாராளுமன் றத் தேர்தலில் தமிழகம் மற் றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் தன்னு டைய மதிநுட்பத்தாலும், சாதனைகளாலும் வென்று, இந்திய தேசிய அரசியலில் இமயம்போல் உயர்ந்து உலக அரசியல்வாதிகளா லும், ஊடகங்களாலும் பாராட்டப்படுகின்ற எங் கள் குடும்பத் தலைவர், முதல்வர் தளபதி அவர்க ளுக்கும்,

பழுத்த அனுபவம் நிறைந்த நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் அவை முன்னவர் துரைமுருகன் அவர்களுக்கும், வருங்கா லத்திலே நமது இயக்கத் தைத் தலைமையேற்று நடத்த இருக்கின்ற இளை ஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத் துறை அமைச்சர் அவர் களுக்கும், தங்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்க ளுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும் என்னு டைய நன்றியைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.

நீரைச் சேமிக்க திட்டங்கள்!

இன்றைய நிலையில், தமிழகத்தின் நீர்வளம் தமி ழகத்தைச் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களோடு ஒப்பிடும்போது பற்றாக் குறை மாநிலமாக இருப் பதை அனைவரும் அறி வோம். இன்று தமிழகத்தின் நீர்வளம் இந்தியாவின் நீர்வ ளத்தில் 2 சதவிகிதமே. தமி ழகத்தின் மக்கள்தொகை இந்தியாவின் மக்கள்தொ கையில் 6.5 சதவிகிதம். ஆனால், நீர்வளம் 2 சதவிகி தம்தான். அதன் காரணமா கத்தான், ஒரு இந்தியக் குடி மகனுக்கு கிடைக்கும் நீரில் மூன்றில் ஒரு பாகம்தான் தமிழகத்தில் வாழும் ஒவ் வொருவருக்கும் இங்கே இப்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்நி லையில்தான் நீர் வளத்தைச் செம்மையாகக் கையாள்வ தற்கும், பருவமழைக் காலங் களில் கிடைக்கும் நீரை உரிய முறையில் சேமிப்ப தற்கும் தகுந்த திட்டங்க ளையும், நடைமுறைகளை யும் வகுக்க வேண்டும். வகுக்கப்படும் திட்டங்க ளின் அடிப்படையில் மக் கள் அவற்றைப் பின்பற்றி, வருங்கால சமுதாயத்திற்குக் காத்துத் தந்திட வேண்டும்.

முக்கியத்துவம் பெறும் நீர் மேலாண்மை!

இந்திய தீபகற்பத்தின் கடைக்கோடி முனையில் உள்ள தமிழகத்தில் பாயும் முக்கியமான ஆறுகள் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாவதால், தமிழ கத்திற்கான நீர் வரத்தும் அண்டை மாநிலங்களையே சார்ந்ததாக இருக்கிறது. அதற்காக நாம் படும் சிரமம் எல்லையில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. மாநிலத்தின் மேற்பரப்பு நீர் 853 tmc என்று கணக்கிடப் பட்டாலும், நமக்குக் கிடைப்பது 592 tmc தான். மீதி 261 tmcஐ கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து வரு கின்ற நதிகள் மூலமாக நாம் பெற வேண்டியிருக்கின் றது. ஆகவே, நீர்வளத்தில் நீர் மேலாண்மை பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. நீர் மேலாண்மையைத் திறம்பட செயல்படுத்த வேண்டுமானால், நீர்வளத்

துறைக்குத் தொடர்புடைய பிற துறைகளான ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைக ளோடு ஒருங்கிணைந்து செயல்படுத்தவேண்டு மென்ற நிலை உள்ளது.

காவிரியைப் பொறுத்த வரை, நமக்கு நடுவர் மன் றம் மூலமாக தீர்ப்பு கிடைத் துவிட்டாலும், அதை மதிக்கக்கூடிய நிலையிலே கர்நாடக அரசு இன்றுவரை இல்லை. ஒவ்வொரு முறை யும் வழங்கப்படுகின்ற தீர்ப் புக்கு எதிராகவே கர்நாடக அரசு அந்த நிலையைக் கடைபிடித்துக் கொண்டி ருக்கின்றது. இதை ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது. மாநி லங்களுக்கிடையே மோதலை உருவாக்கி, அதிலே குளிர் காய்ந்து கொண்டு, அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாக ஒன் றிய அரசு இதிலே எந்த திட்டவட்டமான முடிவி னையும் எடுக்க முன்வர வில்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே பதிவு செய்ய கடமைப்பட் டிருக்கின்றேன். 1990-ல் காவிரி மேலாண்மை சம்பந் தமான வழக்கில், அப்பொ முது மூத்த தலைமை நீதிப தியாக இருந்த நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் அவருடைய தீர்ப்பாணை யில், ஒன்றிய அரசைப் பற்றி மிக அழகாகக் குறிப்பிட்டி ருக்கின்றார்கள்.

அக்கறை காட்டாத ஒன்றிய அரசு!

எல்லா மாநில மக்களின் பாதுகாவலன் என்ற முறை யில், ஒன்றிய அரசு இது போன்ற சிக்கல்கள் வரும் போது காலம் தாழ்த்தாமல் அரசியலமைப்பு இயந்தி ரத்தை முடுக்கிவிட வேண் டும். நல்லவேளையாக, நாடாளுமன்றம் இது போன்ற சட்டத்தை இயற்றி வைத்துள்ளது. இத னால், ஒன்றிய அரசுக்குக் கொடுத்துள்ள அதிகாரத் தைப் பயன்படுத்தி ஒருசார் பற்ற தீர்ப்பாயத்திற்கு விட முடியும். இவ்வளவு காலம் இந்தச் சிக்கல் நீண்டதற்குக் காரணம் எதுவுமில்லை. சட் டப்படியான கட்டளை யாக உள்ள நடவடிக் கையை எடுக்க இன்னும் தாமதித்தால், கோப உணர்ச்சிகளை மேலும் கிள றிவிடும்; கசப்பினை அதிக ரிக்கும். சிக்கல் மேலும் பெரிதாவதற்குமுன், சட்ட வடிவ முறைப்படி இயங்கச் செய்யவேண்டும். 'நகத் தால் கிள்ளாததை, பின்னர் கோடாரி கொண்டுதான் வெட்டவேண்டும்' என்று மிக அருமையாக சொல்லி யிருக்கின்றார்கள். அந்த வகையிலே, ஒன்றிய அரசு இதிலே எந்தவித அக்கறை யும் காட்டவில்லை என் பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய மாதவரம் தொகுதியைப் பொறுத்த வரை, கடந்த 6 மாதங்களில் ஏறக்குறைய 187 கோடி ரூபாய்க்கு நீர்வளத் துறை மூலமாக பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக் கின்றன. புழல் ஏரியிலிருந்து வெளியேறும் உபரிநீர், வெள்ளமாக மாறாமல், மக் கள் வசிக்கின்ற பகுதிகளுக் குச் செல்லாத வகையிலே, தடுப்புச் சுவர்கள் அமைக் கும் பணி நடந்துகொண்டி ருக்கின்றது.

மாதவரத்தில் உள்ள ரெட்டை ஏரியை ஆழப்ப டுத்துவதற்காக, 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டு, வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின் றன. அதேபோன்று என்னு டைய தொகுதியிலுள்ள தணிகாசலம் கால்வாயைச் சீரமைத்து புதிய கால்வாய் கட்டுவதற்காக 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சோழவரம் ஏரியின் கரையை பலப்ப டுத்துவதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணி கள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. அதற்காக முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

நீர்வளத் துறை சார்பாக, நம்முடைய தலைவர் முத்த மிழறிஞர் கலைஞர் அவர் கள் பல்வேறு திட்டங்களை தமிழகத்திற்கு செய்து கொடுத்திருக்கின்றார்கள். முத்திரை திட்டங்களான தாமிரபரணி - கருமேனி யாறு - நம்பியாறு இணைப் புத் திட்டம், காவேரி டெல்டா தூர் வாரும் பணி கள், (மணியடிக்கப்பெற் றது) தமிழ்நாடு நீர்வளத் திட்டம் போன்ற 86 திட் டங்களை நம்முடைய முதல்வர். . .

முதல்வர் அவர்களும் கொடுத்திருக்கின்றார்கள்.

தொகுதிக் கோரிக்கைகள்!

இப்போது, என்னுடைய தொகுதியினுடைய முக்கிய மான சுமார் ஐந்து கோரிக் கைகளைச் சொல்லிவிட்டு, நான் உரையை முடித்து விடுகிறேன்.

மாதவரம் ரவுண்டான முதல் சோழவரம் டோல் கேட் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்க 1,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒன்றிய அரசு தயார் நிலையில் உள் ளது. அவர்கள் வைத்திருக் கின்ற கோரிக்கை என்ன வென்றால், TNGST வரியை தமிழ்நாடு அரசாங்கம் விலக்கிக் கொண்டால், ஒன் றிய அரசு அதற்கான பணத் தைக் கொடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் என்று சொல்லியிருக்கிறது. அதைத் தயவு செய்து பரிசீ லனை செய்து நிறைவேற்றித் தர வேண்டும்.

மாதவரத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. எனவே, அங்கே அதைத் தயவு செய்து அமைத்துத் தர வேண்டும். புதிய தாலுகா—மாதவரம் தொகுதிக்குட்பட்ட பொன்னேரி தாலுகா ஒன் பது பிர்க்காக்களைக் கொண்டது. ஏறக்குறைய 650 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. சென்னை மாவட்டத்தை விட ஒன்றரை மடங்கு அதிக பரப்பளவு கொண்ட இந்த வட்டம், பெரியதாக இருப்பதால், இதைத் தயவு செய்து இரண்டு வட்டங்க ளாக பிரித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி சட்டமன்றத் தில் நான் பல தடவை பேசி யிருக்கின்றேன். நம்மு டைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதேபோன்று, இன் னொரு முக்கியமான விஷ யம். மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியத்தி லுள்ள மோரை ஊராட்சி, பாலவீடு ஊராட்சி, பொத் தூர் ஊராட்சி போன்ற ஊராட்சிகளெல்லாம் சென்னை அல்லது ஆவடி மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதாக பத்தி ரிகை செய்திகள் வந்துள் ளன. இதைக் கண்ட மக் கள், மிகவும் கோபமடைந்து மிகவும் அதிர்ச்சியோடு போராட்டங்களில் ஈடுபட முயற்சிக்கிறார்கள். ஆகவே, இதை தயவு செய்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். காரணம் என்னவென்றால்

15 ஆயிரம் குடும்பங்கள் 100 நாட்கள் வேலை வாய்ப்பை இழக்கின்ற நிலை ஏற்படுகிறது. தயவு செய்து அதை நிறுத்த வேண் டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்கின் றேன். அடுத்தது, கடந்த மாதம் ஹைடெக் சிட்டி ஒன்று சென்னையிலே உரு வாக்கப்படும் என்று அறி விப்பு வந்திருக்கிறது. அதைத் தயவு செய்து மாத வரத்திலே உருவாக்கிட வேண்டும். ஏனென்றால், அங்கு 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. நம்முடைய ஆவின் மற்றும் கால்நடை துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அதை அமைத்துத் தர வேண்டும்.

அடுத்ததாக, மகசூல். 'மா' மகசூலுக்கு insurance காப்பீடு வேண்டுமென்று பல ஆண்டுகளாக நான் வலி யுறுத்திக் கொண்டிருக்கின் றேன். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்க ளுக்கும் தெரியும். இந்த வருடம்கூட 'மா' மகசூல் நன்றாக இல்லை. ஆயிரக்க ணக்கான, இலட்சக்கணக் கான, விவசாயிகள் பாதிக் கப்பட்டிருக்கின்றனர். அதையும் செய்துதர வேண் டுமென்று என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பேசினார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா,மோ. அன்பரசன் தலைமையின் கீழ் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மேற்பார்வையில் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு செம்பாக்கம் வடக்கு பகுதி களுக்கு ஒதுக்கப்பட்ட நந்திவாடி ஊராட்சி பாகம் 137 இல் செயல் வீரர்கள் கூட்டம் கிளைச் செயலாளர் சாரதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் பணி பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை எவ்வாறு தேர்தல் பணி ஆற்றுவது குறித்து சிறப்புரை ஆற்றினார். பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் மற்றும் க.ரமேஷ், ச. சிவகுமார், ஜெ.வி.சந்திரசேகர், கோ.ஞான கிராமன், ஜெ.இன்சமாம், ஜி.கருணாமூர்த்தி, எம்.கமல்ராஜ், சி.ஆர்.நரேஷ்குமார், ஏ.ராஜா, பி. கிஷோர், மணி ரத்தினம், கே.தேவா மற்றும் நந்தி வாடி கிளை கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.